Registered as a News Paper

பக்கங்கள் 04 விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம்: 03 திருவள்ளுவர் ஆண்டு 2023 பங்குனி 13 ( 26 - 03 - 1992 ) வியாழக்கிழமை ஓசை 37

## தமிழ்பாடசாலைவிழாவுக்கு சிங்களத்தில் அழைப்பு

தமிழ்ப் பாடசாலைகளின் பெயர்ப்பலகைகள் தமிழில் எழுதப்பட வேண்டும். இப்பாடசாலைகளின் விழாக்கள் தொடர்பான அழைப்பிதழ்கள் தமிழில் அச்சடிக்கப்பட வேண்டும் என்று மேல்மாகாணசபை கல்வி அமைச்சர் சுரணிமல ராஜபக்ஷ குறிட்பிட்டார் கடந்த வாரம் ஹங்வெல்ல கொத்தணிப் பிரிவிலுள்ள ஒரு தமிழ் கலவன் பாடசாலையில் புதிய கட்டடத் திறப்புவிழாவில் உரையாற்றுகையிலேயே ராஜபக்ஷ மேற்கண்டவாறு கூறினார் திறப்புவிழாவிற்கான அழைப்பிதழ் தனிச்சிங்களத்தில் மட்டுமே அச்சிடப்பட்டமை குறித்துப் பெற்றோர்களும், நலன்விரும்பிகளும் சுட்டிக் காட்டியதையடுத்தே சுரணிமலராஜபக்ஷ மேற்கண்டவாறு தெரிவித்தார்.

## ★ கிழக்கில் மற்றுமோர் சாதனை

# புலிகள் மின்னல் வேக அதிரடி

# செங்கலடியில் 22 ராணுவம் பலி

## பலர் காயங்களுடன் தப்பிஓட்டம்

(மட்டக்களப்பு - கொழும்பு)

மட்டக்களப்பு, செங்கலடியில் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட அதிரடித் தாக்குதல் ஒன்றில் 22 இற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். பெரும் எண்ணிக்கையில் படையினர் காயமடைந்தனர். செங்கலடி இராணுவ முகாமிலிருந்து ரோந்துசென்ற இராணுவத்தினர் மீதே இத்துணிகர தாக்குதலை விடுதலைப் புலிகள் நடத்தினர். இத்தாக்குதலின்போது இராணுவத்தினரிடம் இருந்து பெருமளவு ஆயுதங்களைப் புலிகள் கைப்பற்றினர்.

இம்மோதலில் விடுதலைப் புலிப்படை வீரர் ஒருவர் வீரச்சாவைத் தழுவிக்கொண்டார்.

இதேவேளை புலிகளின் தாக்குதலுக்கு உள்ளான இராணுவத்தினருக்கு உதவியாக வந்த இராணுவத்தினரும் விரட்டியடிக்கப்பட்டனர்.

நேற்றுக்காலை 10 15 மணியளவில் செங்கலடி இராணுவ முகாமிலிருந்து முத்திரையடி ஏற்றம் இராணுவ முகாம் நோக்கிச் சென்றுகொண்டிருந்த இராணுவ அணியே புலிகளின் அதிரடி நடவடிக்கையால் சின்னாபின்னமாகியது. இந்த இராணுவ அணியில் சுமார் 45 இராணுவத்தினர் சென்றிருந்தனர். ... டனர். மேலும் 16 நவீன ரகத் துப்பாக்கிகளைப் புலிகள் கைப்பற்றினர்.

இதேவேளை புலிகளின் தாக்குதலுக்கு உள்ளான இராணுவ அணிக்கு உதவியாக கரடியனாறு முகாமிலிருந்து 100 இற்கு மேற்பட்ட இராணுவத்தினர் கனரக வாகனங்கள் சகிதம் முன்னேற இராணுவத்தினரை புலிகளின் வேறொரு

[4 ஆம் பக்கம் பார்க்க]

## வைத்தியசாலையில் 7 இராணுவம் பலி

## புலிகளைக் கைது செய்ய பொலிஸ்உசார்நிலையிலாம்

(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் ரஞ்சன் விஜயரட்ன கொலை, கூட்டுப்படை தலைமை அலுவலக குண்டு வெடிப்பு ஆகியவை தொடர்பாக தேடப்பட்டுவரும் பொட்டு அம்மான் மற்றும் இருவரை கைது செய்ய சிறிலங்கா பொலிசார் உசார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர் என சிறிலங்கா பொலிஸ் வட்டாரங்கள் லங்காபுவத்திற்கு தெரிவித்துள்ளன.

புலிகளின் வெடிகுண்டு நிபுணர்களான ரவிக்குமார், ரவிச்சந்திரன் ஆகியோரே ஏனைய தேடப்படுபவர்களாவர் என லங்காபுவத் மேலும் தெரிவித்தது.

## கொழும்பு பயணிகளுக்கு துப்புரவு செய்யும் வேலை

(வவுனியா)

வடபகுதியிலிருந்து தென்பகுதி நோக்கிச் செல்லும் பயணிகளில் பலர் பேயாடி கூழாங்குளம் சோதனை முகாமிற்கு அருகில் உள்ள பற்றைக் காடுகளை வெட்டித் துப்புரவு செய்கின்றனர்.

மேற்படி சோதனை முகாமில் சோதனைக்கு உட்படுத்திய பின்னர் ஆண்பயணிகளை இராணுவத்தினர் துப்புரவு வேலைக்கு அழைத்துச்செல்கின்றனர்.

பற்றைக்காடுகளில் பதுங்கி இருந்து புலிகள் தாக்கலாம். அதனால்தான் புலிகளின் ஆதரவாளர்களை வைத்தே அப்பற்றைகளை வெட்டித் துப்புரவு செய்கின்றோம் என்று இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர். (தி)

## மூன்று யாழ். வாசிகள் கோயம்புத்தூரில் கைது

தமிழகத்தில் உரிய முறையில் பொலிசாரிடம்பதிவு செய்யாத மூன்று இலங்கைத் தமிழ் மாணவர்கள்கோயம்புத்தூரில் பொலிசாரால் கைது செய்யப்பட்டு சிறப்புமுகாமில் தடுத்து வைக்கப் பட்டுள்ளனர்.

இம் மூவரும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்களாகவும், சனிக்கிழமையன்று கைதுசெய்யப்பட்டதையடுத்து விசாரணைக்காக சென்னைக்கு கொண்டு வரப்பட்டதாகவும், தெரியவருகிறது.

## ஜோசெப் முகாமில் பலலொறிகள் தடுத்துவைப்பு

(வவுனியா)

வவுனியா ஜோசெப் இராணுவ முகாமில் வடபகுதியைச் சேர்ந்த பல லொறிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளன.

வவுனியா பேயாடி கூழாங்குளம் பிரதான வீதி ஊடாக வடபகுதிக்கு தடைசெய்யப்பட்ட பொருள்களை ஏற்றி வந்தன என்ற குற்றச்சாட்... மில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் அனைவரும் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டு, சட்டரீதியிலான விசாரணை மேற்கொள்ளப்பட்ட பின்னரே விடுதலை செய்யப்படுவதுபற்றித் தீர்மானிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

## கடலடியில் முதன்முதலில் தொல்பொருள் ஆய்வு

(கொழும்பு)

இலங்கையில் முதல் தடவையாகக் கடலுக்கடியில் தொல்பொருள் ஆராய்வு வேலைகள் காலிப பகுதியில் நடைபெறவுள்ளன. அவுஸ்திரேலிய அரசாங்கத்தின் உதவியுடன் சிறிலங்கா அரசின் தொல்பொருள் துறையால் இந்த ஆராய்ச்சி மேற்கொள்ளடபடவுள்ளது.

காலி துறைமுகத்தைச் சூழவுள்ள பகுதியில் நடைபெறற ஆரம்பக் கட்ட ஆராய்ச்சியில் 1625 ஆம் ஆண்டைச் சேர்ந்த பதினைந்து அங்குல மணி ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. அத்துடன் கடலுக்கடியில் மூழ்கிய சில கப்பல்களின் பாகங்களும் கண்டெடுக்கப்பட்டது.

## கடலில் மீனவர் பற்றி தகவலறியத் துரித ஏற்பாடு

(கொழும்பு)

கடலில் மீன்பிடிக்கச்சென்று காணாமல்போகும் மீனவர்களைத் தேடிக் கண்டுபிடிக்கும் பணியைத் துரிதப்படுத்துவதற்காக இராமேஸ்வரத்திலும், கன்னியாகுமரியிலும் இரண்டு தொலைத்தொடர்பு மையங்கள் அமைக்கப்படும் என்று தமிழ்நாடு மீன்வளத் துறை அமைச்சர் ஜெயக்குமார் நேற்று சட்டப்பேரவையில் பேசும்போது தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில் கடலில் காணாமல்போன தகவல் கிடைத்தவுடன் இந்தத் தொலைத்தொடர்பு மையங்களுக்கும் கடற்படையினருக்கும் தகவல் தெரிவிக்கப்பட்டு உடனடி நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

## செஞ்சிலுவை தேர்தல்

சேர்ந்த பல லொறிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளன.

வவுனியா பேயாடி கூழாங்குளம் பிரதான வீதி ஊடாக வடபகுதிக்கு தடைசெய்யப்பட்ட பொருள்களை ஏற்றி வந்தன என்ற குற்றச்சாட்டின் பேரிலேயே இவ்வாறு தடுத்து வைக்கப்பட்டுள்ளன.

மேற்படி லொறிகளின் சாரதிகள், கிளினர்கள் இம் முகாமில் ... பட்டு, சட்டாதியினால் விசாரணை மேற்கொள்ளப்பட்ட பின்னரே விடுதலை செய்யப்படுவதுபற்றித் தீர்மானிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

சுமார் இருபத்தைந்து லொறிகள் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. (தி)

## இடம்பெயர்ந்த மக்கள்

# வைத்திய சேவையை பூரணப்படுத்த முயற்சி

[யாழ்ப்பாணம்]

சிறிலங்கா இராணுவ நடவடிக்கைகளால் இடம்பெயர்ந்த மக்களுக்கான வைத்திய சேவையின் தேவைகளை ஆராய்ந்து அறிந்து ஆவன நடவடிக்கைகள் எடுக்கப்படவிருக்கிறது.

குடாநாட்டில் பல்வேறு பகுதிகளிலும் உள்ள இடம்பெயர்ந்த மக்களுக்குத் தேவையான மருத்துவ சேவைகள் தொடர்பாக யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் ஆராய்ந்து அறிந்து வருகிறது இவ்விடயம் தொடர்பாக விரைவில் பூரண அறிக்கை ஒன்று தயா

[4 ஆம் பக்கம் பார்க்க]

## மூதூர் ஊரடங்கு நீக்கம்

திருக்கோணமலை மாவட்டம் மூதூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் அமுல் படுத்தப்பட்ட ஊரடங்கு சட்டம் நேற்றுக்காலை எட்டு மணி முதல் நீக்கப்பட்டிருப்பதாக கூட்டுப்படைத் தலைமையலுவலகம் அறிவித்துள்ளது.

# வவுனியா நகர வீடுகளில் இராணுவம் சோதனை

(வவுனியா)

வவுனியா நகரப்பகுதி வீடுகள் மீண்டும் இராணுவ சோதனைக்குடபடுத்தப்படுகின்றன.

இராணுவத்தினருடன், பொலிஸார் கிராமசேவையாளர்கள் இந்த சோதனையில் ஈடுபட்டுள்ளனர்.

பொலிஸில் பதிவு செய்யாமல் வீடுகளில் தங்கியிருப்போர் இச் சோதனையின் போது கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்றனர்.

இரவு வேளைகளிலும் சோதனை நடைபெறுகிறது என்று நகரப்பகுதியிலிருந்து வரும செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேசமயம் கிராமப்புறங்களிலிருந்தோ அல்லது வேறிடங்களிலிருந்தோ வந்து உறவினர்கள், நண்பர்கள் வீடுகளில் தங்கியிருப்போரும்

(4 ஆம் பக்கம் பார்க்க)

...ந்த இராணுவ அணியை புலிகளின் அதிரடி நடவடிக்கையால் சின்னாபின்னமாகியது. இந்த இராணுவ அணியில் சுமார் 45 இராணுவத்தினர் சென்றிருந்தனர்.

இந்த இராணுவ அணிமீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட அதிரடி நடவடிக்கையால் 15 இராணுவத்தினர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர். இந்த அணியில் வந்த ஏனைய இராணுவத்தினர் தப்பியோடிவிட்...

# வைத்தியசாலையில் 7 இராணுவம் பலி

(மட்டக்களப்பு)

செங்கலடியில் புலிகளின் தாக்குதலுக்கு உள்ளான இராணுவ அணியினரில் ஏழு பேர் வைத்தியசாலையில் மரணமானதாக கொழும்புப் பாதுகாப்புவட்டாரங்கள் தெரிவித்ததாக ஏஜென்சி செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை செங்கலடி மோதலில் காயமடைந்த பல இராணுவத்தினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருப்பதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

# கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள்

[மட்டக்களப்பு]

நேற்றுக் காலை மட்டக்களப்பு செங்கலடிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடன் நடந்த மோதலில் விடுதலைப்புலிகளால் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விபரம் வருமாறு.

- ★ ஏ.கே. ரக இலகு இயந்திரத் துப்பாக்கி - 01
- ★ அதற்குரிய லிங்குகள் - 535
- ★ றம் மகசின் - 01
- ★ ரி-56-2 ரகத் துப்பாக்கி-06
- ★ ரி-56-1 ரகத் துப்பாக்கி - 03
- ★ ரி-56 புது மொடல் துப்பாக்கி - 04
- ★ ரி-56 மகசின் - 38
- ★ ரி-81 ரகத் துப்பாக்கி- 02
- ★ அதற்குரிய மகசின் - 06
- ★ தொலைத் தொடர்பு சாதனம் - 01
- ★ மேலதிக மின்கலம் - 01
- ★ நடுத்தர ரவைகள் - 1950
- ★ ஏ.கே கோல்சர் - 11
- ★ ெல்மட் - 05
- ★ கிற்பாக் - 02
- ★ சப்பாத்து - 07 சோடி

# தென்னிலங்கைமேற்றிராணிமார்கள் யாழ்ப்பாணம் வந்துள்ளனர்

## வெள்ளியன்று புலிகளின் பிரதிநிதிகளை சந்திப்பர்

(யாழ்ப்பாணம்)

தென்னிலங்கையில் இருந்து கத்தோலிக்க மேற்றிராணிமார்களைக் கொண்ட தூதுக்குழுவொன்று யாழ்ப்பாணம் வந்துள்ளது. இனப்பிரச்சினைக்கு சமாதான முறையில் தீர்வொன்றைக் காணும் முயற்சியில் இத் தூதுக்குழுவினர் ஈடுபட்டுள்ளதாக அறிய வருகிறது.

இக் குழுவில் சிலாபம் கண்டி மேற்றிராணிமார்கள் இடம்பெற்றுள்ளனர். இத்

[4 ஆம் பக்கம் பார்க்க]

# தமிழர் உரிமை வழங்கும் நிலையில் சிறிலங்கா அரசு இல்லை

- திலகர்

[லண்டன்]

சிறிலங்கா அரசு அல்லது சிங்கள தேசத்தைப் பொறுத்தவரையில் எப்பொழுதும் சிங்கள இனவாதம் தலைவிரித்தாடுவதை நாம் காணக்கூடியதாக இருக்கிறது. அப்படியான ஒரு சூழ்நிலையில் எந்தவித உரிமைகளையும் தமிழர்களுக்குக் கொடுக்கின்ற நோக்கம் எப்பொழுதும் அரசாங்கத்துக்கு இருந்ததாகத் தெரியவில்லை அந்த அடிப்படையில் தான் அமைச்சர் தொண்டமனையோ அல்லது பாராளுமன்றத் தெரிவுக் குழுவையோ விடுதலைப் புலிகள் யாழ்ப்பாணத்துக்கு அழைத்த பொழுது அந்தக் கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்டுள்ளன. என்று லோறன்ஸ் திலகர் தெரிவித்தார்.

பாராளுமன்றத் தெரிவுக் குழு யாழ்ப்பாணத்திற்குச் செல்ல மறுத்திருப்பது பற்றி தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மூத்த உறுப்பின

[4 ஆம் பக்கம் பார்க்க]

...மையங்கள் அமைக்கப்படும் என்று தமிழ்நாடு மீன்வளத் துறை அமைச்சர்ஜெயக்குமார் ... உடனடி நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

# செஞ்சிலுவை தேர்தல் சூடு பிடிக்கின்றது

(யாழ்ப்பாணம்)

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ் கிளையில் நடைபெறவிருக்கும் கிளைத் தேர்தலில் தாம நிர்வாகத்திற்கு வர வேண்டும் என்பதற்காக வீடு வீடாக சென்று தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளனர். இதுபற்றி மேலும் தெரியவருவதாவது,

தற்போதைய நிர்வாகத்திற்கு எதிராக உதவி அரசாங்க அதிபர் பிரிவு செஞ்சிலுவைச் சங்கப் பிரிவில் கூட்டங்களும் நடாத்தப்படுகின்றது. (75)

## மூதூரில்

# கிராமங்கள் சுற்றி வளைப்பு; ஐம்பது தமிழர் கைது

(மூதூர்)

மூதூர் பகுதியில் ஊரடங்குச் சட்டம் அமுல் படுத்தப்பட்ட காலத்தில் ஐம்பதிற்கு மேற்பட்ட தமிழர்கள் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். மூதூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் கடந்த ஞாயிற்றுக்கிழமை முதல் நேற்றுக்காலை எட்டு மணிவரை அமுலிலிருந்த ஊரடங்கு உத்தரவின் போதே இக் கைதுகள் இடம்பெற்றுள்ளது.

கட்டைபறிச்சான், சம்பூர், கிளிவெட்டி, சீதனவெளி, செருகல்ஆற்றங்கரை போன்ற தமிழர் கிராமங்கள் அதிகஎண்ணிக்கையிலான இராணுவத்தினரால் சுற்றி வளைக்கப்பட்டபோது இடம்பெற்ற சித்திரவதைகளில் இருபது தமிழர்கள் படுகாயமடைந்துள்ளனர். இவர்களில் எவரும் மருத்துவ சிகிச்சை பெறவும் இராணுவம் அனுமதிக்கவில்லை.

# 2ஆம் லெப். சேரன் வீரச்சாவு

(மட்டக்களப்பு)

செங்கலடியில் நேற்றுநடந்த மோதலில் இரண்டாம் லெப்டினன்ட் சேரன் எனப்படும் குணரத்தினம் தெய்வேந்திரராசா (மகிளூர், களுவாஞ்சிக்குடி) என்னும் வீரவேங்கை வீரச்சாவைத தழுவிக் கொண்டார். இவருக்கு விடுதலைப் புலிகள் வீரவணக்கம் செலுத்தியுள்ளனர்.

## அன்னை பூபதி

# நினைவுக் கூட்டமும் உண்ணா விரதமும்

(யாழ்ப்பாணம்)

தியாகச்சுடர் அன்னைபூபதி நினைவாக அடையாள உண்ணா விரதமும் நினைவஞ்சலிக் கூட்டமும் இன்று சண்டிலிப்பாய் வட்டவை பிரதேச சாவற்காடு காந்தி சனசமூக நிலைய முன்றலில் இடம் பெறவுள்ளது.

அடையாள உண்ண விரதம் காலை 8 00மணிமுதல்மாலை 4 00 மணி வரை இடம்பெறும் இதனைத் தொடர்ந்து பொதுக்கூட்டம் இரவு ஏழு மணிக்கு ஆரம்பமாகும் இப் பொதுக்கூடடத்தில் விடுதலைப்புலிகளைச் சேர்ந்த

[4 ஆம் பக்கம் பார்க்க]

# 90 ஆம் நாள் நினைவஞ்சலியும்
## அந்தியேட்டி அழைப்பும்



லெப்டினனட்
அசோக்
(சிவகுரு சிறீதரன்)
ஜனனம்: 05. 10. 1966
வீரச்சாவு: 07. 12. 1988
(இந்தியப்படையுடனான மோதலில்)



சின்ன அசோக்
(சிவகுருஇளங்கோதரன்)
ஜனனம்: 02 01: 1972
இயற்கை
மரணம்: 10: 03: 1991



ஜனனம்:
23
—
10
—

வீரச்சாவு:
28
—
12
—


## மேடை வாடகைக்கு
### அமைத்தல்

சகலவிதமான நாட்டிய, நாடக, நினைவஞ்சலிக் கூட்டங்கள் நடாத்துவதற்குரிய மேடைகளும், கலியாண பந்தலுக்குரிய மேடைகளும் அதிரடிப்பாணியில் அமைத்துத் தரப்படும்.

தொடர்பு: கொள்ளவேண்டிய விலாசம்
திரு. **KL** செல்லத்துரை
6, நல்லூர் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

[2338]


## திருத்தம்

நீங்காத நினைவில் என்ற தலைப்பில் 23-03-92 (திங்கள் கிழமை) எமது இதழில் வெளியான விளம்பரத்தில்சிறு தவறு நிகழ்ந்துள்ளமை கவலைக்குரியது.

''புரட்சியைத் துரிதப்படுத்தும் வழி முறை எதுவோ அதுவே நெறியின் இலக்கியமாகும் என்று லெனின் கூறியதையே நானும் நெறியாக மதிக்கிறேன் அதைத் துரிதப்படுத்தும் செயற்பாடுகளில் ஒன்றாக எழுத்தையும் மதிக்கிறேன்''

-கே. டானியல்

என்பதுவே சரியானதாகும்.


COMMERCIAL BANK

## வர்த்தகவங்கி - யாழ். கிளை
# புத்தாண்டு பரிசுப் போட்டி

வருகின்ற தமிழ் / சிங்கள புத்தாண்டு தினத்தையொட்டி
வரையறுக்கப்பட்ட இலங்கை வர்த்தக வங்கியின்
**யாழ். கிளையானது**
தனது வாடிக்கையாளர்களுக்கும் இப்பிரதேச மக்களுக்குமாக
புத்தாண்டுப் பரிசுத் திட்டம் ஒன்றை முன்வைக்கின்றது.
இதன் பிரகாரம் கீழே தரப்பட்ட
கேள்விக் கொத்துக்கு சரியான விடை அளிக்கின்றவர்களில்
50 பேருக்கு அவரவர் அதிஷ்டத்திற்கு உரிய வகையில்
★ **பரிசில்கள் காத்திருக்கின்றன** ★
இதில் பங்குபற்ற விரும்புபவர்கள் பூர்த்தி செய்யப்பட்ட கேள்விக் கொத்தை

முகாமையாளர்,
வரையறுக்கப்பட்ட இலங்கை வர்த்தக வங்கி,
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்

என்ற முகவரிக்கு தபால் மூலம் அல்லது நேரில் 31— 03— 1992 க்கு முன்பு கிடைக்கக்கூடியதாக அனுப்பவும் அல்லது கையளிக்கவும்.

குறிப்பு:- இப்போட்டியில் பங்குபற்றுபவர்கள் 31- 03- 1992 அன்று 18 வயதுக்குக் குறையாதவர்களாக இருக்க வேண்டும்.

- பரிசு பெறுபவர்கள் விபரம் பத்திரிகையில் வெளியிடப்படும்.
  இப்போட்டியில் வங்கியினால் எடுக்கப்படும் முடிவே இறுதியானதும் தீர்க்கமானதும் ஆகும்.
  வங்கி ஊழியர்களும் அவர்களது குடும்பத்தவரும் இப்போட்டியில் பங்கு பற்றுதல் தவிர்க்கப்பட்டுள்ளது.

வர்த்தக வங்கி - யாழ். கிளை



1970 — 1991

## 2-ஆம் லெப்டினன்ட் அசோகா

### (சிவகுரு இந்திரகுமாரி)

*(ஆனையிறவு தளம் மீதான தாக்குதலில் காயமுற்று சிகிச்சை பெற்றுவரும் போது)*

### ஓ! மாவீர மைந்தர்களே!!

காலத்தை உருவாக்கிய தலைவனின் பாதையில்
காவியமாகிய வீரப் புலிகளே,
ஒரு கூண்டிலே ஒன்றாக மகிழ்ந்து சிரித்து
வாழ்ந்தவர்கள் நாம் அன்று......... ஆனால் இன்று
பேரினவாதத்திற்கெதிரான யுத்தத்தில் உங்களையும் இணைத்தீர்கள்.
தியாக வேள்வியில் நீங்களும் வேங்கைகளாக மாறினீர்கள்.
இந்திய, சிறிலங்கா படையுடன் உங்கள் வீரம் தன்னைக் காட்டினீர்கள்.
ஈழம் தன்னை மீட்டிட உங்கள் உயிரையே துச்சமென துறந்த
வீரவேங்கைகள்.
எம் இனிய சகோதரர்களே! - நீங்கள் நேசித்த ஈழமண்
விரைவில் விடுதலை பெறும்.

**26-03-1992(வியாழன்)இன்று நடைபெறுகின்ற2ஆம்லெப்டினன்ட்அசோகாஅவர்களின் அந்தியேட்டிக் கிரியையில் கலந்து கொள்ளுமாறு, இயக்க உறுப்பினர்கள், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.**

**-குடும்பத்தினர்**

தற்போதைய முகவரி:-
கல்லூரிறோட்,
''அரசகேசரி வீதி''
தம்பசிட்டி,
பருத்தித்துறை.

''அசோக் வீதி''
புலோலி மேற்கு
பருத்தித்துறை.

*(2337)*

---

## வர்த்தக வங்கி - யாழ். கிளை

# கேள்விக்கொத்து

1. வரையறுக்கப்பட்ட இலங்கை வர்த்தக வங்கி எப்போது ஸ்தாபிக்கப் பட்டது?
   ..............................................................
2. தற்போதைய வர்த்தக வங்கியின் யாழ். கிளைக் கட்டடம் முன்பு எந்த நிறுவனத்தின் உடைமையாக இருந்தது?
   ..............................................................
3. யாழ் வர்த்தக வங்கிக்கிளை இக்கட்டடத்தினைப் பொறுப்பேற்று எப்போது செயற்படத் தொடங்கியது?
   ..............................................................
4. வர்த்தக வங்கிக்கு தற்போது இலங்கையில் எத்தனை கிளைகள் உண்டு?
   ..............................................................
5. அவை எங்கெங்கு உள்ளன?
   ..............................................................
   ..............................................................
6. வர்த்தக வங்கியின் தலைமைச் செயலகத்தின் முகவரியைத் தருக.
   ..............................................................
7. இவ்வங்கியின் தற்போதைய நிர்வாக இயக்குனரின் பெயர் என்ன?
   ..............................................................
8. வர்த்தக வங்கியினால் மிகவும் அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்ட இரண்டு சேமிப்புத்திட்டங்களின் பெயரினைத் தருக.
   ..............................................................
9. யாழ் வர்த்தக வங்கிக் கிளையில் சேமிப்புக் கணக்கை ஆரம்பிப்பதற்கான ஆகக்குறைந்த ஆரம்ப வைப்புத் தொகை எவ்வளவு?
   ..............................................................
10. தற்போது இவ் வங்கியினால் சேமிப்புக்கணக்கு வைப்புகளுக்கு வழங்கப்படும் வட்டி வீதம் யாது?
   ..............................................................

அனுப்புபவரின்

முழுப்பெயர்:-..............................................

அடையாள அட்டை இலக்கம் / கடவுச்சீட்டு இலக்கம்: -..............................

முகவரி :-..............................................
..............................................
..............................................

(சி- 4093)

## சிந்தனைக்கு

''அரசாங்கம் என்பது மனிதத் தேவைகளை நிறைவு செய்ய; மனித விவேகத்தினால் ஏற்பாடு செய்யப்படும் ஒரு அமைப்பேயாகும்''

— எட்மன்ட்பர்க்

ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம் 26-03-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2308
த பெ. எண் 05

# "இராணுவ அதிகாரியின் அரசியல் ஞானம்"

"அரசியல் தீர்வு எதுவும் முன் வைக்கப்படாத நிலையில் இராணுவமோ அல்லது பாதுகாப்புப் படையினரோ தனித்து ஒரு மக்கள் கிளர்ச்சியை அடக்குவது உலகில் எந்த இடத்திலும் அமைதியை ஏற்படுத்தியதில்லை என்பதை எல்லோரும் அறிவர்'' என திருமலை மாவட்டத்திற்குப் பொறுப்பான சிறிலங்கா இராணுவத் தளபதி பிரிகேடியர் சிறி பீரிஸ் தெரிவித்துள்ளார். அத்தோடு 'நாங்கள் திறம்படச் சமாளித்து வருகின்றோம். எனினும் இப்பொழுதும் திருமலை மாவட்டத்தில் தாக்கும் சக்தி பொருந்தியவர்களாகவே புலிகள் உள்ளனர்' எனவும் பிரிகேடியர் சிறி பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இராணுவ அதிகாரி ஒருவரின் இப்பேச்சானது எதற்காக, ஏன் பேசப்பட்டது என்பதை விட இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்று எவ்வளவு முக்கியமானது என்பதை உணர்த்துவதாகவுள்ளது.

பிரிகேடியர் சிறி பீரிஸ், இராணுவத் தீர்வை விட அரசியற் தீர்விற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும் என வற்புறுத்துகின்றமை அவருடைய இராணுவ பயிற்சியின்போது அவருக்கு ஊட்டப்பட்டதல்ல அவரது உலக அறிவும் அவரின் நேரடி அனுபவமுமே அவரை இவ்வாறு பேச வைத்துள்ளது.

பிரிகேடியர் சிறி பீரிஸ் 'நாம் திறம்பட செயற்பட்டாலும் புலிகள் இப்போதும் திருமலையில் தாக்குதல் சக்தி படைத்தவர்களாகவே உள்ளனர்' என அங்கலாய்த்து இருப்பது கிழக்கு மாகாணத்தில் அவருக்கு ஏற்பட்ட நேரடி அனுபவத்தின் வெளிப்பாடாகும். மிக நெருக்கமாக முகாம்களை அமைத்திருந்தபோதிலும், புலிகளின் தாக்குதல்களைச் சமாளிக்க முடியாதுள்ளதையே அது காட்டுகிறது. 1010 சதுரமைல் பிரதேசத்தில் 121 இராணுவ முகாம்களும், 50 பொலிஸ் நிலையங்களும் இங்கு உள்ளன. ஆனால், ரோந்து செல்லும் பிளட்டூன்களில் சில திரும்பி வருவதே இல்லை. சிலவேளை ஒரு சிலர் திரும்பி வரின் அவர்கள் கூறும் கதைகளோ பயங்கரமானவையாகும். இவற்றின் அடிப்படையிலேயே பிரிகேடியர் சிறி பீரிஸ் அரசியல் தீர்வைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

இராணுவ அதிகாரிகளில் பெரும்பாலானோர் பிரிகேடியர் சிறி பீரிஸ் போன்று அரசியல் தீர்வை வற்புறுத்துபவர்களாக இல்லாமல் இருக்கலாம்.

# சுயாதிபத்தியத்தைக் காப்பாற்ற மூன்றாவது போர் நடத்தவேண்டும்

## கருணாநிதி வேண்டுகோள்

(சென்னை)

''பிரித்தானியாவிற்கு எதிராக இந்தியா முதலாவது சுதந்திரப் போரை நடத்தியது. ஜனநாயகத்தைக் காப்பாற்ற அவசரகாலச்சட்டத்திற்கு எதிராக 1976 இல் இரண்டாவது போரை நடத்தியது. நாட்டின் பொருளாதார சுயாதிபத்தியத்தைக்காப்பாற்றுவதற்காக மூன்றாவது போரை நடத்த மக்கள் இப்போது தயாராக வேண்டும்''.

இவ்வாறு திராவிட முன்னேற்றக்கழகத் தலைவர் மு. கருணாநிதி வேண்டுகோள் விடுத்துள்ளார். வி. ஓ. சி. பார்க்கில் நடைபெற்ற பொதுக் கூட்டம் ஒன்றில் உரையாற்றும் போதே இந்த வேண்டுகோளை அவர் விடுத்தார். தொடர்ந்து உரையாற்றிய கருணாநிதி;

ஊழல் நிறைந்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசை பதவியிலிருந்து அகற்றுவதற்கான அமைதிப் புரட்சிக்கு தயாராகுமாறு தமிழக மக்களை கேட்டுக்கொள்கிறேன் என்றும் அவர் தெரிவித்தார்.

கொடுங்கோன்மைத் தனமாக முதலமைச்சர் ஜெயலலிதா ஆட்சி நடத்துகிறார். மகா மகம் துயரச் சம்பவத்தில் நூறுக்கு அதிகமானவர்கள் இறந்திருக்கிறார்கள் என்பது எனக்கு நிச்சயம். அந்தச் சம்பவம் தொடர்பாக நீதி விசாரணை நடத்துமாறு பொது மக்கள் விடுக்கும் கோரிக்கைக்கு இணங்குவதற்கு ஜெயலலிதா கர்வத்தனமாக மறுக்கிறார்.

'தடா' சட்டத்தின் கீழ் கைதாகியிருக்கும் தி. மு. க. தலைவர்களின் வழக்குகளுக்கு நிதி திரட்டவேண்டிய நிர்ப்பந்த நிலை கழகத்திற்கு ஏற்பட்டிருக்கிறது. சட்டம், ஒழுங்கு நிலைமை கட்டுப்பாட்டை மீறிச் சென்று அந்த நிலைமையை சமாளிக்க இயலாத நிலை பொலிஸாருக்கு ஏற்படும் பட்சத்தில் மாத்திரமே 'தடா' சட்டத்தை பயன்படுத்தலாம் என உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பொன்று கூறுகிறது.

எனவே 'தடா' சட்டத்தை தமிழக அரசு பயன்படுத்துகிறது என்றால் மாநிலத்தில் சட்டம் ஒழுங்கு நிலைமை கட்டுப்பாட்டில் இல்லை என்று அரசே ஒத்துக்கொள்வதற்குச் சமனாகும். அ. தி. மு. க. அரசை இதற்காகக் கலைத்து விடவேண்டும்.

மத்திய அரசின் புதிய பொருளாதாரக் கொள்கை நாட்டின் சுயாதிபத்தியத்தை வெளிநாட்டு சக்திகளுக்கும் பல்தேசியக் கம்பனிகளுக்கும் விற்பதற்கு சமமானதாகும். புதிய பொருளாதாரக் கொள்கை முன்னெடுக்கப்பட்டால் அரசாங்கத்துறை என்ற கோட்பாடும் தொழிலாளர் வர்க்கத்தின் நலனும் இல்லாமல் போய் விடும் என்று கருணாநிதி தனதுரையில் குறிப்பிட்டார்.

பின்னர் செய்தியாளர்கள் மத்தியில் பேசிய அவர்,

அண்மையில் இடம் பெற்ற நிகழ்வுகளின் விபரங்களை நான் இன்னமும் டில்லியிலிருந்து பெறவில்லை. வி பி.சிங் மற்றும் தலைவர்களுடன் விடயங்களை ஆலோசித்த பின்னர் தான் என்னால் எதையுமே செய்யக் கூடியதயிருக்கும் என்று குறிப்பிட்டார்.

# பொரு. கொள்கைக்கு எதிராக மறியல் போராட்டம்

(சென்னை)

மத்திய, மாநில அரசுகளின் பொருளாதாரக் கொள்கையையும் விலைவாசி உயர்வையும் கண்டித்து இந்தியக் கம்யூனிச கட்சியினர் நேற்று முன்தினம் தமிழகமெங்கும் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதில் கலந்து கொண்ட ஆயிரக் கணக்கான தொண்டர்கள் தமிழக காவல் துறையால் கைது செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து கருத்துத் தெரிவித்ததமிழ்நாட்டு குழுச் செயலாளர் ஆர் நல்லக்கண்ணு கம்யூனிச தொண்டர்கள் மறியலுக்காக புறப்பட்ட இடங்களிலேயே கைதுசெய்யப்பட்டார்கள் என்றும் இது ஜனநாயக விரோதமான செயல் என்றும் தெரிவித்துள்ளார்.

திருச்சியில் 291 பெண்கள் உட்பட 437 பேரும், சேலத்தில் 700 பேரும், கோயம்புத்தூரில் 250 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பர்மிய அகதிகள் நாகலாந்தில்

ஏதுமறியா அப்பாவிக் குடிமக்கள் மீது இராணுவம் நடத்தும் அத்துமீறல்களைத் தடுத்து நிறுத்துமாறு இந்திய அரசின் வெளிவிவகார இணை அமைச்சர் எட்வார்ட்டேபெலாஸ்ரோ பர்மிய அரசைக் கேட்டுள்ளார். செய்தியாளர்களிடையே பேசிய அவர் மேலும் கூறுகையில் சுமார் ஆயிரத்து ஐந்நூறு பர்மிய அகதிகள் இந்தியாவின் நாகலாந்து மாநிலத்தில் தஞ்சம் புகுந்துள்ளதாக குறிப்பிட்டார்.

# விடுதலைப் புலிகளை தடை செய்யாவிடில் போராட்டம் நடத்துவோம்

## - சுப்பிரமணியம் சுவாமி

(சென்னை)

விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் வே. பிரபாகரனை மே மாதம் 21ம் திகதிக்கு முன்னதாகவழக்கு விசாரணைக்கு கொண்டு வர வேண்டும் எனவும் விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தடை செய்யவேண்டும் எனவும் ஜனதாகட்சி தலைவர் சுப்பிரமணியம் சுவாமி மத்திய அரசை கேட்

னால் தமிழக காங்கிரஸ் உறுப்பினர்களை பதவி விலகக்கோரி போரட்டம் ஒன்றை ஆரம்பிக்கப் போவதாக தெரிவித்தார். ஆகஸ்ட் 15 ஆம் திகதி வரை இப்போராட்டம் நடைபெறும் எனவும், அதன் பின்னர் இந்தியப் பிரதமர் நரசிம்மராவை பதவி விலகக் கோரி போராட்டம் நடத்தப்

# அன்னைபூபதி நினைவு

## சனசமூகநிலையங்கள் ஏற்பாடு

அன்னைபூபதி தமிழீழமண்ணுக்குத் தனது உயிரைத் தியாகம் செய்தமையை நினைவு கூரும் முகமாக யாழ் மாவட்டத்திலுள்ள 869 சனசமூகநிலையங்களிலும் அன்னைபூபதியின் படங்களை வைத்துத் தீபமேற்றி வைப்பதுடன் ஞாபகார்த்தச் சிரமதானப் பணிகளையும் கிராமம் தோறும் மேற்கொள்ளுமாறு யாழ் மாவட்டச் சனசமூக நிலையங்களின் சம்மேளனத் தலைவர் திரு இ. தவகோபால் வேண்டுகோள்விடுத்துள்ளார்.

அன்னைபூபதி நினைவுக் கருத்தரங்குகள் நடாத்தும் படியும் கோரப்பட்டுள்ளது. (24)

# வேலணை கல்விக்கோட்ட முத்தமிழ் விழா

வேலணை கல்விக்கோட்டம் ஒழுங்கு செய்துள்ள முத்தமிழ் விழா வரும் வெள்ளி, சனிக்கிழமைகளில் யாழ்ப்பாணம் சென் ஜோன்ஸ் அக்கடமியில் இடம்பெறவுள்ளது

இவ் விழாவின் நிகழ்ச்சிகள் காலை 8 30-12.30 மணிவரையும் மாலை 3.00 மணி முதல் மாலை 6 00 மணி வரையும் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# செஞ்சிலுவை தேர்தல் வேட்பாளர் சிலர் போட்டியில் பின்னடிப்பு

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளை த்தேர்தலில் போட்டியிடபதிவு செய்த சிலர் நேற்று முன்தினம் தாம்போட்டியிட மாட்டோம் என அறிவித்துள்ளனர் எனினும் காரணம் எதுவும் தெரியவில்லை. (75)

# உதை பந்தாட்ட சுற்றுப் போட்டி

யாழ். கல்வித் திணைக்கள உடற்கல்விப் பிரிவினால் நடத்தப்படும் 15- வயதுக்குட்பட்ட உதைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டிகளின் இறுதிப்போட்டி இன்று பிற்பகல் 4.00 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

இப்போட்டியில் றோ.க.த. கலவன் பாடசாலை எதிர் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி அணிகள்மோதும்.

# கடவுள் நம்பிக்கையற்றோர் கதிர்காம பாதயாத்திரை

## -- பிரேமதாசா

[கொழும்பு]

மதத்தில் நம்பிக்கையில்லாதவர்கள் மதம் மக்களுக்கு அபினி என்றவர்கள் கடவுள் நம்பிக்கையில்லாதவர்கள் இப்போது கதிர்காமம் நோக்கிப் பாதயாத்திரைசெல்கிறார்கள் என்று ஜனாதிபதி ஆர். பிரேமதாசா சனியன்று ஹூறுப்பிட்டிய கங்கராமயாவில் அவரின் 42 வருடகால அரசியல் - சமூக வாழ்வைக் குறிக்கும் முகமாக நடைபெற்ற பிங்கம வைபவத்தில் பேசும்போது குறிப்பிட்டார்.

எதிர்க்கட்சிகளின் பாதயாத்திரையை அரசுகுழப்ப விரும்பவில்லை. வன் செயல்களில் ஈடுபடாமல் ஒருவர் தனது உணர்வுகளை வெளிப்படுத்துவது நல்ல வழி என்றும் அவர் கூறினார்.

# கம்பனி என்ற போர்வையில்

செல்லும் பிளட்டூன்களில் சில திரும்பி வருவதே இல்லை. சிலவேளை ஒரு சிலர் திரும்பி வரின் அவர்கள் கூறும் கதைகளோ பயங்கரமானவையாகும். இவற்றின் அடிப்படையிலேயே பிரிகேடியர் சிறி பீரிஸ் அரசியல் தீர்வைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

இராணுவ அதிகாரிகளில் பெரும்பாலானோர் பிரிகேடியர் சிறி பீரிஸ் போன்று அரசியல் தீர்வை வற்புறுத்துபவர்களாக இல்லாமல் இருக்கலாம். ஆனால், இராணுவத்தினரின் இழப்புக்களையும், தமது நோக்கம் குறித்த தெளிவான நோக்கம் கொண்ட எந்த இராணுவ அதிகாரிகளும், அரசியல் தீர்வை வற்புறுத்தவே செய்வர்.

ஆனால், இராணுவ அதிகாரிகள் சிலரிடமாவது உருவாகியுள்ள இம்மனமாற்றம், யதார்த்தத்தை ஏற்றுக்கொள்ளும் தன்மை அரசியல்வாதிகளிடம் இல்லையென்றே கூறவேண்டும் ஆளும் கட்சியாக இருந்தால் என்ன? எதிர்க்கட்சியாக இருந்தால் என்ன? ஒருவரை ஒருவர் குறை கூறியே வளர்ந்தவர்கள். இனவாதம் மூலம் அதிகாரத்தைச் கைப்பற்றியவர்கள் எவ்வாறு ஓர் அரசியல் தீர்விற்கு செல்ல முடியும்? அவ்வாறு அரசியல் தீர்வு குறித்துப் பேசினால், அவர்கள் தமது அரசியல் எதிர்காலமே அஸ்தமித்து விடும் என அஞ்சுகின்றனர்.

ஆனால், அரசாங்கமும் எதிர்க்கட்சிகளும் தற்பொழுது வெளிப்படையாக இனப்பிரச்சினைக்கு அரசியற் தீர்வு காணப்பட வேண்டும் என கூக்குரல் இடுகின்றன. ஆனால், இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக சிபார்சுகளை மேற்கொள்ளவோ அன்றி சாட்சியமளிக்கவோ பிரதான சிங்கள அரசியல் கட்சிகள் எவையும் முன்வரவில்லை. மேலும் இனப் பிரச்சினைக்கு தீர்வுத் திட்டத்தை சமர்ப்பிக்கவென பாராளுமன்றத் தெரிவுக்குழு உறுப்பினர்கள் மத்தியில் கூட ஒற்றுமையில்லை. அவர்கள் தமது கட்சி அரசியலையும், இனவாத அரசியலையும் கைவிடுவதாக இல்லை. இவர்களுக்கிடையில் ஏற்பட்டுள்ள இழுபறியால் இப் பாராளுமன்ற தீர்வுக் குழு ஒரு தீர்வுத்திட்டத்தை முன் வைக்குமா என்பதே சந்தேகமானது.

பாராளுமன்றத் தெரிவுக்குழு யாழ்ப்பாணம் வந்து மக்களைச் சந்தித்து, அவர்களின் அபிலாசைகளையும். நெருக்கடிகளையும் அறிந்து செல்லலாம் என விடுதலைப் புலிகள் அண்மையில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் ஊடாக பாராளுமன்றத் தெரிவுக் குழுவிற்கு தகவல் கொடுத்திருந்தனர். ஆனால், பாராளுமன்றத் தெரிவுக்குழு யாழ்ப்பாணம் வரவோ அன்றி மக்களின் பிரச்சினைகளையும், அபிலாசைகளையும் அறிந்து கொள்ளவோ தயாராக இல்லை. அதாவது தமிழ் மக்களின் கோரிக்கைகளை விளங்கிக் கொள்ளவோ, புரிந்து கொள்ளவோ முயற்சிக்காமல் ஒரு தீர்வுத் திட்டத்தை பாராளுமன்றத் தெரிவுக்குழு முன் வைக்க முற்படுகின்றது.

ஆனால், இது சாத்தியப்படப் போவதில்லை. அமைச்சர் தொண்டமான் கூறியது போன்று ''யார் விரும்பினால் என்ன? யார் விருபாவிட்டால் என்ன? விடுதலைப் புலிகளே தமிழ் மக்களின் அபிலாசைகளைப் பிரதிபலிக்கும் இயக்கம்'' தமிழர் தேசிய இனப் பிரச்சினைத்தீர்வு காண்பதென்றால் அவர்களுடன் தான் பேசித் தீர்வு காண வேண்டும். இதை உணர்ந்து கொள்ளாதவரை ஒன்றென்ன எத்தனை பாராளுமன்றத் தெரிவுக்குழுக்கள் நியமிக்கப்பட்டாலும் அவற்றால் இனப்பிரச்சினைக்கு தீரவு காணவே முடியாது.

---

மே மாதம் 21ம் திகதிக்கு முன்னதாகவழக்கு விசாரணைக்கு கொண்டு வர வேண்டும் எனவும் விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தடை செய்ய வேண்டும் எனவும் ஜனதாகட்சி தலைவர் சுப்பிரமணியம் சுவாமி மத்திய அரசை கேட்டுள்ளார்.

இவ்வாறு செய்யத்தவறின் ஆரம்பிக்கப் போவதாக தெரிவித்தார். ஆகஸ்ட் 15 ஆம் திகதி வரை இப்போராட்டம் நடைபெறும் எனவும், அதன் பின்னர் இந்தியப் பிரதமர் நரசிம்மராவை பதவி விலகக் கோரி போராட்டம் நடத்தப் படும் எனவும் அவர் தெரிவித்தார்.

# கேரள ரயில் நிலையத்தில் குண்டு புரளியில் பரபரப்பு

[கேரளா]

கேரளா மாநிலம் கோலம் பகுதியில் உள்ள புகையிரத நிலையமொன்றில் குண்டு வைக்கப் பட்டிருப்பதாக கிடைத்த கடிதம் ஒன்றினால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

மேற்படி புகையிரத நிலைய அதிபருக்கு, கணேசன். விடுதலைப் புலிகளின் பிராந்திய தளபதி தமிழ்நாடு என குறிப்பிடப்பட்ட கடிதமொன்று கிடைத்தது. அதில் பத்து லட்சம் ரூபாவை உடனடியாக தன்னிடம் தராவிட்டால்புகையிரதநிலையம்குண்டுவைத்துத் தகர்க்கப்படும் எனக் குறிப்பிடப் பட்டிருந்தது.

இதனையடுத்து விசேட பொலிஸ் படையினர் மோப்ப நாய்களுடன்தேடுதலை நடாத்தியதாகவும் கூறப்படுகிறது.

# ஸ்கட் ஏவுகணை அனைத்தும் ஈராக் அழித்து விட்டது

## - ஐ. நா. ஆய்வுக் குழு அறிக்கை

(பக்தாத்)

ஈராக் தனது எல்லா ஸ்கட் ஏவுகணைகளையும் அழித்து விட்டது என முப்பத்தைந்து பேர் கொண்ட ஐ நா. பரிசோதனைக் குழுவின் தலைவர் அறிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில் ஏவுகணைகளைத் தயாரிப்பதற்கு பயன்படும் எல்லா சாதனங்களையும் ஈராக் அழித்து விட்டமைக்கான சான்றுகள் சேசரிக்கப்பட்டிருப்பதாகவும், பலஸ்ரீக் மற்றும் இரசாயன ஆயுதங்களையும் ஈராக் அழித்திருப்பதாக ஈராக் கூறுவதை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக மேலும் ஒரு வாரம் இக்குழு அங்கு தங்கியிருக்கும் எனவும் தெரிவித்தார்.

## தென்னாபிரிக்காவில்

# பல கட்சி அரசுக்கான அரசியல் சாசனம்

(ஜாகன்னர்ஸ்பர்க்)

தென்னாபிரிக்காவில் பல கட்சி அரசுக்கான புதிய அரசியல் சாசனம் வரையப்படும் வரையில் ஆட்சியை நடத்திச் செல்ல தேர்ந்தெடுக்கப்பட்ட இடைக்கால பாராளுமன்றம் ஒன்றை அமைக்கும் இடைக்கால அரசியல் சாசனத்திற்கான திட்டங்களை டி. கிளார்க் அரசு அறிவித்துள்ளது.

இதனிடையே நேற்று முன் தினம் ஜாகன்னஸ் பர்க்கில் நடைபெற்ற ஜனநாயகத் தென்னாபிரிக்காவிற்கான மாநாட்டில் நான்கு மாற்றுக் குழுக்கள் அமைக்கப்படவேண்டுமென யோசனை தெரிவிக்கப்பட்டு உள்ளது.

---

# கம்பனி என்ற போர்வையில் தோட்டங்கள் தனியார் வசம்

## -தொ.தே.சங்கம் ஆட்சேபம்

[பதுளை]

தோட்ட நிர்வாகங்கள் 22 கம்பெனிகளிடம் கையளிக்கப் படும் எனக்கூறப்பட்டபோதும் நடைமுறையில் இதற்குமாறாகவே காரியங்கள் நடைபெறுகின்றன. ஏனெனில் மாத்தளைப் பகுதியில் தோட்டங்களை தனிப்பட்டவர்களிடம் கையளிக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரியவருகின்றது. இதனால் தொழிலாளர்கள் எதிர்காலத்தில் பெரும் சிரமங்களை எதிர் நோக்கவேண்டிநேரிடும்எனவே கம்பெனிகள் என்ற போர்வையில் தனியாரிடம் தோட்டங்கள் கையளிப்பதை அரசாங்கம் நிறுத்தவேண்டும் இவ்வாறு தொழிலாளர் தேசிய சங்கத் தலைவர் டி. அய்யாத்துரை வேண்டுகோள்விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தெரிவித்த தகவலில் தோட்டங்கள் தேசியமயமாக்கப் பட்ட பின் பல தோட்டங்கள் 'உசவசம' என்றபெயரில் தனியாரிடம் கையளிக்கப்பட்டன. இவ்வாறு கையளிக்கப்பட்ட தோட்டங்களில்வேலைசெய்த தொழிலாளர்கள் தனியார் தோட்டத்தொழிலாளர்களை விட மிக மோசமாக பாதிக்கப் பட்டனர். எனவே இந்த ஒரு நிலைமை மீண்டும் ஒருமுறை தோன்ற இடமளிக்கக்கூடாது என்றும் குறிப்பிட்டார்.

## ஐ நா நிபந்தனைகளுக்கு

# பாக்தாத் இணக்கம் குர்திஷ்க்கு ஏமாற்றம்

(சலாஹுதீன்)

ஈராக்கிய ஜனாதிபதி சதாம் குசைனுக்கு எதிராக மேற்கு நாடுகள் மீண்டும் இராணுவ நடவடிக்கையில் இறங்கும் என நம்பிக்கொண்டிருந்த குர்திஷ்காரர்கள் ஐக்கிய நாடுகளின் கோரிக்கைகளுக்கு இணங்க பேரனர்த்தம மிகு ஆயுதங்களை ஈராக் அழித்து வருகின்றது என்ற செய்தி கேட்டு ஏமாற்றமடைந்திருக்கிறார்கள்.

இது குறித்து குர்திஷ் நான் ஜனநாயக கட்சியின் தலைமைக் காரியாலயத்தில் இருந்த அதிகாரி ஒருவர் பின் வருமாறு குறிப்பிட்டார்.

'இது எமக்கொரு கெட்ட செய்தி. சதாமை முடிப்பதற்கு இதையொரு வாய்ப்பாக மேற்குலகம் பயன் படுத்துமென நாம் எதிர் பார்த்துக்கொண்டிருந்தோம்' என்றும, 'ஐ. நா. வின் நிபந்தனைகளுக்கு ஈராக்கிய பிரதி பிரதமர் தாரிக் அசீஸ் இணங்கியிருக்கிறார் என்பதைக் கேள்விப்பட்ட போது நாம் பெரும் ஏமாற்றம் அடைந்தோம்' என்றும் அவர் தெரிவித்தார்.

ஈராக் மத்திய அரசாங்கத்துக்கு எதிராக பல தசாப்த காலமாக குர்திஷ்காரர்கள் போராடி வருகிறார்கள். சதாம் குசைன் தூக்கியெறியப்பட வேண்டுமென்ற விருப்பத்தை குர்திஷ்காரர்கள் வெளிப்படையாகச் சொல்ல தயங்குவதேயில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

# கட்சித் தலைவரிடம் நஷ்டஈடு கோரும் சட்டம்

(சென்னை)

அரசியல் கட்சிகள் போராட்டம் நடத்தி பொதுச் சொத்துகளுக்கு நஷ்டம் விளைவித்தால் சம்பந்தப்பட்ட கட்சித் தலைவரிடமிருந்து இழப்பீடு பெறுவது தொடர்பாக சட்டம் ஒன்று கொண்டுவரப்படும் என்று முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா சட்டப்பேரவையில நேற்று முன்தினம் தெரிவித்தார்.

அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழகம் ஆட்சியைப் பொறுப்பேற்றதிலிருந்து தி.மு கவும். பாட்டாளிமக்கள்கட்சியும் பொதுச் சொத்துக்களுக்கு நஷ்டம் விளைவிக்கும் செயல்களில் ஈடுபடுகின்றன. திட்டமிட்டு இந்தச் செயல்கள் நடத்தப்படுகின்றன என்று கூறினார்,

ஈழநாதம்

# சிறிலங்காவுடனான கடல் எல்லையில் எந்தவித மாற்றமும் இல்லை

## - இந்தியா அறிவிப்பு

(டில்லி)

சிறிலங்காவுடனான கடல் வாணிப எல்லையில் எந்தவித மாற்றமும் இல்லை என்று இந்திய மத்திய அரசு அறிவித்துள்ளது.

இந்திய வெளிவிவகார அமைச்சின் அதிகாரியொருவர் நேற்று முன்தினம் செய்தியாளர்களிடையே பேசுகையில் இதனைத் தெரிவித்தார். கச்சதீவு தொடர்பாக தமிழக முதல்வர் ஜெயலலிதா எழுப்பிய பிரச்சினை பற்றி செய்தியாளர்கள் அவ் அதிகாரியிடம் வினவினர்.

அதற்குப் பதிலளித்த அவ் அதிகாரி தமிழக மீனவர்கள் சிறிலங்கா கடற்படையினரால் தொடர்ந்து தாக்கப்படுவது பற்றி தமிழக முதல்வர் பிரதமரிடம் முறையிட்டிருந்தார். அதனையடுத்து இது பற்றி மிக்க எச்சரிக்கையுடன் பரிசீலிக்குமாறு பிரதமர் வெளியுறவு அமைச்சரைக் கேட்டுக் கொண்டார் என்பது தெரிந்ததே எனக் கூறினார்.

அத்துடன் 1974 ஆம், 1976 ஆம் ஆண்டுகளில் இந்தியாவிற்கும், சிறிலங்காவிற்கும் இடையே ஏற்பட்ட கடல் வாணிப எல்லை சம்பந்தமான ஒப்பந்தத்தை தொடர்ந்து கச்சதீவு இலங்கைக்கே சொந்தமானது: ஆனாலும் இந்திய மீனவர்கள் இங்கு மீன் பிடிக்கவும், வலைகளை உலர்த்தவும், ஒய்வெடுக்கவும் அந்தோனியார் ஆலயத்தில் வழிபாடு செய்யவும் உரிமை பெற்றுள்ளனர் எனவும் அவர் தெரிவித்தார்.

# கறிவேப்பிலைபோல் எம்மை எறிந்துவிடக் கூடாது

## - திவ்வியநாதன் கவலை

நெருக்கடி ஏற்படுகின்ற வேளையிலே எம்மைப் பயன்படுத்திவிட்டு கறிவேப்பிலை போல எம்மை அரசாங்கம் தூக்கி எறிந்துவிடக் கூடாது. அத்தகைய போக்கை அரசாங்கம் பின்பற்றக் கூடாது என்று நிதியமைச்சரும் பிரதமருமான டி. பி. விஜயதுங்காவிற்கு எதிராக எதிர்க்கட்சிகள் கொண்டுவந்த நம்பிக்கையில்லாத் தீர்மான விவாதத்தில் கலந்துகொண்டு பேசிய திவ்வியநாதன் எம். பி. குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில் எமது மக்கள் சொல்லொணாக் கஷ்டங்களை அனுபவித்துக் கொண்டிருக்க இத்தகைய விவாதங்களில் எதுவித அர்த்தமுமில்லை. எமது மக்களுக்கு இதனால் எந்தப் பயனும் இல்லை ஆனால் அரசுடன் ஒத்துழைத்து பிரச்சனைகளுக்கு தீர்வு காணும் எமது நிலைப்பாட்டை வெளிப்படுத்தவே இங்கு நான் பேசுகிறேன் எனவும் குறிப்பிட்டார்.

---

வைத்திய

ரிக்கப்பட இருக்கிறது. இதைத் தொடர்ந்து வேண்டிய வைத்திய சேவையை வழங்குவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவிருக்கிறது

---

# மரண அறிவித்தல்

## திருமதி இராமலிங்கம் செல்லம்மா

புங்குடுதீவு 11ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த திருமதி இராமலிங்கம் செல்லம்மா 24-03-1992 செவ்வாய்க் கிழமை காலமானார்.

இவர் காலஞ்சென்ற இராமலிங்கத்தின் அன்பு மனைவியும் புவனேஸ்வரி, திலகவதி, கனகலிங்கம் (எழுது

# வெளியார்மீது தாக்குதல்; சுவிஸ் அரசு விசனம்

(கொழும்பு)

சுவிற்சலாந்தில் வெளிநாட்டவர்கள்மீது தாக்குதல் சம்பவங்கள் அதிகரிப்பது தொடர்பாக பெரும் விசனம் அடைவதாக அந்நாட்டரசு கூறியுள்ளது.

1990ஆம் ஆண்டில் வெளிநாட்டவர் தாக்கப்பட்ட நாற்பத்தியொரு சம்பவங்களும் 1991ஆம் ஆண்டில் இத்தகைய சம்பவங்கள் தொண்ணூறாக அதிகரித்துள்ளமையினை ஒரு அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

# பாதயாத்திரையினருக்கு மக்கள் பெரும் வரவேற்பு

(மாத்தறை)

கதிர்காமத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கும் பாதயாத்திரைக்கு பொதுமக்களால் பெரும் வரவேற்பு அளிக்கப்பட்டுவருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இப்பாதயாத்திரைக்கு தலைமை வகிக்கும் மகிந்த ராஜபக்ஷவுடன் ஏழு கட்சிகளின் தலைவர்களும் ஆதரவாளர்களும் இணைந்து கொண்டுள்ளனர்.

இதனிடையே இந்த பாதயாத்திரையில் பங்கு பற்றாமல் விலகியிருந்த இலங்கை கம்யூனிஸ்ட்கட்சி காலி, மாத்தறை மாவட்டத்தில் உள்ள தமது கட்சி ஆதரவாளர்களையும், மாகாணசபை, நகர மாநகர, பிரதேசபை உறுப்பினர்களையும் பாதயாத்திரைக்கு பூரண ஆதரவு நல்குமாறு தந்தி மூலம் கேட்டுள்ளது

காணாமல் போயுள்ள தமது பிள்ளைகள் குறித்தும் தமக்கு இழைக்கப்பட்ட நேர்மையீனங்கள் பற்றியும் 475 இற்கு மேற்பட்ட புகார் கடிதங்களை இதுவரை பொதுமக்கள் பாதயாத்திரையில் பங்கு பற்றிச் செல்லும் கட்சிகளின் தலைவர்கள் ஊடாக பாதயாத்திரை ஒழுங்குத் தலைவர் மந்தப் ராஜபக்ஷவிடம் ஒப்படைத்துள்ளனர்.

# பிரேமதாசா தலைமையில் விவசாயிகள் கூட்டம்

எதிர்வரும் நான்காம் திகதியன்று நாடெங்குமிருந்து ஐம்பதாயிரம் விவசாயிகள் கொழும்பில் சிறிலங்கா ஜனாதிபதி தலைமையில் கூடவுள்ளனர். விவசாயிகள் ஒய்வூதியத்திட்டத்தின் கீழ் நூறு விவசாயிகள் இத்தினத்தன்று முதல் கொடுப்பனவை பெறவுள்ளனர்.

# மாவீரருக்கு மக்கள் நவாலியில் அஞ்சலி

மூதூரில் களமாடி விழுப்புண்பட்டு 23-03-92 அன்று வீரச்சாவைத்தழுவிக் கொண்ட லெப். நளன் (செல்வசேகரம்- கணேசலிங்கம் - மூதூர்) மணலாற்றில் களமாடி வீரச்சாவைத் தழுவிக் கொண்ட வீரவேங்கை தர்சினி (வனிதா - கந்தசாமி வாழைச்சேனை), கப்டன் மணாளன் (சண்முகநாதன் -

வலி - மேற்கு அரசியற் பிரிவுப் பொறுப்பாளர் இளையவன் தலைமையில் இடம்பெற்றது. இவ் அஞ்சலிக் கூட்டத்தில் செல்வி. வெண்ணிலா, திரு. செல்வநாயகம் ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

---

தமிழர்

ரில் ஒருவரான வோறன்ஸ்

# சர்வதேச செஞ்சிலுவைக்கு கனடா உதவி

(கொழும்பு)

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் இலங்கைக் குழுவிற்கு சுமார் இரண்டரைக் கோடிருபாவை வழங்க கனடா முன்வந்துள்ளது. கனடாவின் உயர் ஸ்தானிகர் இது பற்றி மேலும் கூறுகையில் செஞ்சிலுவைச் சங்கக்கமிட்டியின் இவ் வருடத்திற்கு உதவுவதற்காகவே இவ் உதவி அளிக்கப்படுவதாக தெரிவித்தார்

# ராஜ்யசபாவில் 6 இடங்களை காங்கிரஸ் கைப்பற்றியது

[டில்லி]

ராஜ்யசபாவில் எட்டு இடங்களுக்காக நடந்த தேர்தலில் மூன்று மாநிலங்களில் உள்ள ஆறு இடங்களில் காங்கிரஸ் கட்சி வெற்றிபெற்றுள்ளது.

கர்நாடகாவின் நான்கு இடங்களும் காங்கிரஸ் கட்சிக்கே கிடைத்துள்ளது. அசாமில் ஒரு இடமும் திரிபுராவில் ஒரு இடமும் காங்கிரஸ் கட்சிக்கு கிடைத்துள்ளது இமாசலப் பிரதேசத்தில் பாரதீய ஜனதாவும், நாகலாந்தில் ஆளும் நாகா மக்கள் சபையும் அசாமில் ஒரு சுயேச்சையும் வெற்றி பெற்றுள்ளன.

ராஜ்யசபாவில் காங்கிரஸ் கட்சி அறுதிப் பெரும்பான்மை பெறுவதற்கு இன்னமும் ஏழு இடங்களை மட்டுமே பெற வேண்டியுள்ளது. குறிப்பிடத்தக்கது

# தடுப்புக் காவலில் 400 பேர் இந்தியாவில் கொலை

## சர்வதேசமன்னிப்புசபை குற்றச்சாட்டு

(லண்டன்)

இந்தியாவின் பலவேறு இடங்களிலும் பொலிசாரால் தடுத்து வைக்கப்பட்டவர்களில் நானூறு பேர் கொல்லப்பட்டுள்ளனர் என்று அம்னெஸ்டி இன்டர் நாவுன்ஸ் எனப்படும் சர்வதேச மன்னிப்பு சபையினர் விடுத்த அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. தடுப்புக் காவலில் இருக்கும் போது சித்திரவதை செய்யப்படுதல் கொல்லப்படுதல் என்பன போன்ற இத்தகைய மனித உரிமை மீறல் சம்பவங்கள் 1985 ஆம் ஆண்டிற்கு பின்னர் இந்தியாவில் இடம் பெற்றமைக்கான ஆவணங்கள் தம்மிடம் இருப்பதாக சர்வதேச மன்னிப்பு சபை கூறியுள்ளது. எனினும் இந்தக்குற்றச்சாட்டுகளுக்கு இந்திய அரசு மறுப்பு தெரிவித்துள்ளது.

---

யும் விதித்து வருகிறது ஒரு சமாதானத் தீர்வுக்கான எந்த

---

வவுனியா

தம்மை பொலிஸில் பதிவு செய்ய வேண்டும் என்று அறிவிப்பு விடுக்கப்பட்ட பின்னர், நகரப் பகுதியில் தற்காலிகமாகத் தங்கியிருக்கும் மக்களின் தொகை குறைந்து விட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (தி)

---

நினைவு

# உலகக்கிண்ண கிரிக்கட் பாகிஸ்தான் அணி வெற்றி

உலகக் கிண்ணத்திற்கான கிரிக்கட் போட்டித் தொடரில் பாகிஸ்தான் அணி வெற்றி பெற்றுள்ளது. மெல்போர்னில் நேற்று நடைபெற்ற இறுதி பாட்டத்தில் பாகிஸ்தான் அணி இங்கிலாந்து அணியை இருபத்துநான்கு ஓட்டங்களினால் தோற்கடித்ததின் மூலம் வெற்றிக் கிண்ணத்தை பெற்றது.

முதல் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி ஐம்பது ஓவர்களில் ஆறு விக்கெட் இழப்பிற்கு இருநூற்றி நாற்பதி ஒன்பது ஓட்டங்களை பெற்றது பின்னர் இங்கிலாந்து அணி நாற்பத்துஒன்பதுதசம் இரண்டு ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து இருநூற்றி இருபத்தியொரு ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

இவ் வெற்றிக் கிண்ணத்தை பாகிஸ்தான் அணி பெறுவது இதுவே முதல் தடவையாகும்.

# 'தமிழீழ நோக்கு' வெளியீட்டு விழா

''தமிழீழ நோக்கு'' இதழின் வெளியீட்டு விழா நாளை காலை 10 00 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலை அரங்கில் நடைபெறவுள்ளது

பேராசிரியர் நா. பாலகிருஷ்ணன் தலைமையில் நடைபெறு இந்த புத்தக வெளியீட்டு விழாவின் வெளியீட்டு உரையை கலாநிதி சபா. ஜெயராசாவும், வாழ்த்துரைகளை விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிச் செயலாளர் யோகரத்தினம் யோகி, விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் இளங்குமரன் ஆகியோரும், ஆய்வுரைகளை பேராசிரியர் கா சிவத்தம்பி, பேராசிரியர் வி. கே கணேசலிங்கம், மு. திருநாவுக்கரசு ஆகியோரும் நடத்தவுள்ளனர். நன்றியுரையினை க.தேவராஜா ஆற்றவுள்ளார்.

## உடன் தொடர்பு கொள்ளவும்

கோப்பாய் மருத்துவமனையில் இருந்து கடந்த சனியன்று யாழ் போதனா வைத்திய சாலையில் சேர்க்கப்பட்ட கு. கௌதமசர்மா என்னும் நோயாளி உதவிக்கு எவரும் இல்லாத நிலையில் சிரமப்படுவதாகத் தெரியவருகிறது

சுவாசப்பையில் சளி பீடித்துள்ள நிமோனியா நோயாளியான இவரது உறவினர்களோ அல்லது இவரைத் தெரிந்தவர்களோ உடனடியாக யாழ். போதனா வைத்தியசாலையில் இயங்கும் நோயாளர் நலன்புரிச் சங்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர்.

# தமிழ் அகதிகள் தலைமன்னார் வருகை

இலங்கைத் தமிழ் அகதிகள் நேற்று இராமேஸ்வரத்திலிருந்து தலைமன்னாருக்கு கப்பலில் பயணமானார்கள்

மொத்தம் 149 குடும்பங்களைச் சேர்ந்த இந்த அகதிகள் செங்கற்பட்டு திண்டுக்கல், திருச்சி, கோயம்புத்தூர், மண்டபம் ஆகிய இடங்களிலுள்ள அகதிமுகாம்களிலிருந்து அனுப்பி வைக்கப்படுகிறார்கள்.

---

தென்னிலங்கை

தூதுக்குழுவினர் நாளை

ணாக் கஷ்டங்களை அனுப

மேற்கொள்ளப்படவிருக்கிறது

## மரண அறிவித்தல்

### திருமதி இராமலிங்கம் செல்லம்மா

புங்குடுதீவு 11ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த திருமதி இராமலிங்கம் செல்லம்மா 24-03-1992 செவ்வாய்க் கிழமை காலமானார்.

இவர் காலஞ்சென்ற இராமலிங்கத்தின் அன்பு மனைவியும் புவனேஸ்வரி, திலகவதி, கனகலிங்கம்(எழுது வினைஞர் உதவி அரசாங்க அதிபர் பணிமனை சிலாபத்துறை) தியாகராஜா (எழுது வினைஞர் முல்லைத்தீவு கச்சேரி) பரமலிங்கம் (நியோ கொலம்பஸ் இம்பெக்ஸ் கொழும்பு) காலஞ்சென்ற பத்மாவதி ஆகியோரின் தாயாரும்.

காலம் சென்ற சொக்கலிங்கம், சதாசிவம் (நில அளவையாளர் பகுதி) சபாரெத்தினம் (வர்த்தகர் சுன்னாகம்) ஞானம்மா-கலாநிதி, அகிலேஸ்வரி (ஆசிரியை முத்துத்தம்பி வித்தியாசாலை, திருநெல்வேலி) ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரது ஈமக்கிரியைகள் இன்று வியாழக்கிழமை 10.30 மணிக்கு நடைபெற்று பூதவுடல் 934, சிவிஸ் சென்றர் E.Y.S. றோட் வட்டக்கச்சியில் இருந்து எடுத்துச்செல்லப்பட்டு மம்மல் மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்;
இ. பரமலிங்கம்
(மகன்)

[2336]


குளு குளு சூழலில்
குதூகலமாகக் களித்திட
குளிரோடையை
நாடுங்கள்!
குளிர்பானங்கள் மற்றும் ஐஸ்கிறீம், சர்பத் வகைகளுக்கு நாடவேண்டிய இடம்

குளிரோடை

மின்சார நிலையவீதி, யாழ்ப்பாணம்.
(பஸ் நிலையம் முன்பாக)

✻ உங்கள் இல்லங்களில் மங்களகரமான வைபவங்களுக்காக ஐஸ்கிறீம், கேக் வகைகள் தயாரித்துத் தரப்படும்.

(சி-4103)


## மாவீரருக்கு மக்கள் நவாலியில் அஞ்சலி

மூதூரில்களமாடி விழுப்புண் பட்டு23-03-92 அன்று வீரச்சாவைத்தழுவிக் கொண்ட லெப். நளன் (செல்வசேகரம்- கணேசலிங்கம் - மூதூர்) மணலாற்றில் களமாடி வீரச்சாவைத் தழுவிக் கொண்ட வீரவேங்கை தர்சினி (வனிதா - கந்தசாமி வாழைச்சேனை), கப்டன் மணாளன் (சண்முகநாதன் - சிறீதர் - சுழிபுரம்) ஆகியோரது புகழுடல்கள் மக்கள் அஞ்சலிக்காக நவாலி பரமதேவா இடம் பெயர்ந்தோர் முகாமில் வைக்கப்பட்டு அஞ்சலிக் கூட்டமும் இடம் பெற்றது. இவ் அஞ்சலிக் கூட்டம் வலி - மேற்கு அரசியற் பிரிவுப் பொறுப்பாளர்இளையவன்தலைமையில் இடம் பெற்றது. இவ் அஞ்சலிக் கூட்டத்தில் செல்வி. வெண்ணிலா, திரு. செல்வநாயகம் ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

### புலிகள்

அணி இடைமறித்துத் தாக்கியதைத் தொடர்ந்து அவ் அணியும் பலத்த சேதத்துடன் முகாம் திரும்பியது. ஆனால் இம்மோதலில் இராணுவத்திற்கு ஏற்பட்ட சேதவிபரம் தெரியவில்லை.

இதேவேளை காலை 10.20 மணியிலிருந்து பகல் ஒரு மணி வரை ஒரு ஹெலிகப்டர் செங்கல்லடிப் பகுதியில் பரவலான துப்பாக்கிப் பிரயோகம் செய்தது.

### தமிழர்

ரில் ஒருவரான லோறன்ஸ் திலகரிடம் பி. பி ஸி முகவர் கேட்ட போது அவர் இவ்வாறு தெரிவித்தார்:

அவர் பி.பி ஸிக்கு தொலைபேசி மூலம் வழங்கிய பேட்டியில் மேலும் கூறியதாவது:

இந்தப்பாராளுமன்றத்தெரிவுக்குழு சிறிலங்கா அரசினால் அரசியல் யாப்பிற்கமைய உருவாக்கப்பட்டது. இக்குழுவை தமிழ்மக்களுடைய அபிலாசைகளைத் தெரிந்து கொள்ளும் பொருட்டும் தெரிவுக்குழுவின் பிரதிநிதிகளை விடுதலைப் புலிகள் அழைத்திருந்தும், அந்த நோக்கு சமாதானத்துக்கு வழிவகுக்கும் என்று விடுதலைப் புலிகள் முயற்சி எடுத்திருந்தும் அரசாங்கம் அனுமதிக்காதது துரதிஷ்டவசமான நிகழ்ச்சியாகத்தான் நாங்கள் கருதுகிறோம் என்றார்அவர்.

யாழ்ப்பாணத்துக்கு தெரிவுக்குழு வருவதற்கு முன்னர் புலிப்படையின் முதலில் சமாதானத் தீர்வுக்கான தீர்வுத் திட்டத்தை முன்வைக்க வேண்டும் என்று தெரிவுக் குழு கருதுகிறது. இது பற்றி என்ன நினைக்கிறீர்கள் என்ற கேள்விக்குப் பதிலளித்த லோறன்ஸ் திலகர்.

ஒரு மாற்றுத் திட்டத்தை வைப்பது பற்றியோ அல்லது ஒரு திட்டத்தைப் பற்றியோ விடுதலைப்புலிகள் சிந்திக்கின்ற அளவிற்கு ஒரு சந்தர்ப்பம் வழங்கும் நிலையில் சிறிலங்கா அரசாங்கம் இல்லை என்று கருதுகிறேன். அரசு ஒரு அடக்குமுறையாளனாக இதுவரை காலமும் இருந்து வருகிறது. அந்த அடக்குமுறை அரசு இதுவரைக்கும் சமாதானமாக, சமரஸமாக வாழ்வதற்கான எந்தத் திட்டத்தையும்முன்வைக்கவில்லை அதேவேளை தெரிவுக்குழுவும் இன்னமும் ஒருதிட்டத்தையும் வைக்கவில்லை. இன்னமும் ஒரு இராணுவ ரீதியான நடவடிக்கைகளையும், இனஅழிப்புகளையும் சிறிலங்கா அரசு செய்து வருகிறது. தொடர்ச்சியான படுகொலைகளையும், பொருளாதாரத் தடைகளையும் விதித்து வருகிறது ஒரு சமாதானத் தீர்வுக்கான எந்தவித அறிகுறியும் இல்லாதவாறு சிறிலங்கா அரசு நடந்து வருகின்றது. எனவே விடுதலைப் புலிகள் ஒரு திட்டத்தை வைக்கவேண்டியஒரு சூழ்நிலை உருவாகவில்லை என்றார்.

அவர் தொடர்ந்து கூறியதாவது;

இதேவேளை உலகத்தில் நடந்துவரும் மாற்றங்களை இரு இனமக்களும் இறைமையுடைய நாடுகளாக இருக்கக் கூடிய சூழ்நிலையை காணக் கூடியதாக இருக்கின்றது. அப்படியான எண்ண மாற்றங்கள் சிறிலங்கா அரசுக்கும், சிங்கள மக்களுக்குமிடையில் ஏற்பட்டு இப்படியானசூழ்நிலைக்கு இட்டுச் செல்ல வேண்டும் என்றுதான் நாம் விரும்புகின்றோம். அப்படியான மாற்றங்களின் அடிப்படையில்தான் விடுதலைப் புலிகள் சிறிலங்கா அரசுடன் அல்லது சிங்கள தேசத்துடன் பேசுவதற்கும். அந்த அடிப்படையில் கட்டுமானங்களை உள்ளடக்கிய தீர்வுகளைப்பற்றி முடிவெடுக்க முடியும். அதனைப்பேச்சுவார்த்தை மூலம் ஒரு தீர்வாகக் காண்பதற்கும் வழிவகுக்கும் எனவும் நான் கருதுகின்றேன்.

இராணுவ நடவடிக்கையினால் யாழ்ப்பாண மக்களின் வாழ்க்கை பாதிக்கப்பட்டிருப்பதை புலிப்படை எப்படி சமாளிக்கிறது என்பது பற்றி அவர்கருத்து வெளியிடுகையில்;

யாழ்ப்பாண மக்கள் மட்டுமல்ல தமிழீழ மக்கள் அனைவருமே இந்தப் பாதிப்புக்கு ஆளாகி வருகிறார்கள். இதை சிறிலங்கா அரசு இராணுவ வெற்றிகளை அடைவதற்கான வழியாகச் செய்து வருகின்றது. இத்தகைய நடவடிக்கைகளைப் புலிகளின் துணையோடு மக்கள் எதிர்கொண்டு வருகின்றார்கள். இத்தகைய கஷ்டங்கள் மேலும் மக்களை உறுதியானவர்களாக மாற்றுவதோடு, சுயசார்புப் பொருளாதாரத்தை உருவாக்கும் நிலையையும் உண்டாக்குகிறது. இப்படியாக மக்களை அடிபணிய வைக்கும் அரசின் நடவடிக்கைகளை மக்கள் உறு

டுள்ளனர் என்று அம்னெஸ்டி இன்டர் நாஷனல் எனப்படும் சர்வதேச மன்னிப்பு சபையினர் விடுத்த அறிக்கையொன்றில் தெரிவிக்கப் பட்டுள்ளது. தடுப்புக் காவலில் இருக்கும் போது சித்திரவதை செய்யப்படுதல் கொல்லப்படுதல் என்பன போன்ற இத்தகைய மனித உரிமை மீறல் சம்பவங்கள் 1985 ஆம் ஆண்டிற்கு பின்னர் இந்தியாவில் இடம் பெற்ற

களுக்கு இந்திய அரசு மறுப்பு தெரிவித்துள்ளது.

### வவுனியா

தம்மை பொலிஸில் பதிவு செய்ய வேண்டும் என்று அறிவிப்பு விடுக்கப்பட்ட பின்னர், நகரப் பகுதியில் தற்காலிகமாகத் தங்கியிருக்கும் மக்களின் தொகை குறைந்து விட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (தி)

### நினைவு

இளையவன், மதி வாணி. தேவர்அண்ணா ஆகியோர் உரைநிகழ்த்தவுள்ளனர். இதனைத் தொடர்ந்து கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறவுள்ளன.

தியோடு மக்கள் சுதந்திரத்தையும் சுபீட்சமான வாழ்க்கையையும் ஏற்படுத்தும் நிலைமையை உருவாக்கும்என்றார்.

### வருகை

இலங்கைத் தமிழ் அகதிகள் நேற்று இராமேஸ்வரத்திலிருந்து தலைமன்னாருக்கு கப்பலில் பயணமானார்கள்

மொத்தம் 149 குடும்பங்களைச் சேர்ந்த இந்த அகதிகள் செங்கற்பட்டு திண்டுக்கல், திருச்சி, கோயம்புத்தூர், மண்டபம் ஆகிய இடங்களிலுள்ள அகதிமுகாம்களிலிருந்து அனுப்பி வைக்கப்படுகிறார்கள்.

### தென்னிலங்கை

தூதுக்குழுவினர் நாளை வெள்ளிக்கிழமை 10 மணிக்கு புலிகள் இயக்கப் பிரமுகர்களைச் சந்திக்கவுள்ளதாகத் தெரியவருகின்றது.

இச் சந்திப்பில் புலிகளின் தரப்பில் மக்கள் முன்னணிச் செயலாளர் யோகரெட்ணம் யோகி, அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் ஆகியோர் கலந்து கொள்வார்கள் எனவும் தெரியவருகிறது.

## நினைவு கூருகின்றோம்...

### 1992-03-26

1984 ஆம் ஆண்டு இதே தினத்தில் சிறிலங்காப் படையினரால் கிளிநொச்சியில் வைத்துக் கைது செய்யப்பட்டு, முருகண்டி காட்டுப்பகுதியில் வைத்துச் சுட்டுக்கொல்லப்பட்ட தமிழ்ப்பொதுமகன்.

1987 ஆம் ஆண்டு கட்டுவனில் பலாலி முகாம் சிறிலங்காப் படையினருடனான மோதலில் வீரச்சாவெய்திய-

**மனோ** (நாகலிங்கம் மனோரஞ்சன்-
ஊரதீவு, புங்குடுதீவு)

1989 ஆம் ஆண்டு அம்பாறை, பொத்துவில் பகுதியில் இந்தியப் படையினருடனான நேரடி மோதலின் போது வீரச்சாவெய்திய-

**2-ம் லெப். கலா** (செல்லக்குட்டி சுவேந்திரராஜா-
பொத்துவில், அம்பாறை)

திருக்கோணமலை - நிலாவெளிப்பகுதியில் இந்தியப் படையினருடனான மோதலில் வீரச்சாவெய்திய-

**தயான்** (சின்னராசா அமுதலிங்கம்-
நிலாவெளி, திருக்கோணமலை)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**விடுதலைப் புலிகள்**
**மக்கள் முன்னணி.**

(சி/4089)


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு மார்ச்மாதம் 26 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.